# விஷால் ஸாபுரம்

விஷால் ஸாபுரம் கர்ணாடக இசையில் சித்ரவீணையிலும் (கோட்டுவாத்யம்) வாய்ப்பாட்டிலும் ஒரு திறமான இலைஞர். குழந்தையாகவே பேரார்வம் காட்டி மூன்று வயதாக திருமதி கற்பகம் நாராயணன் அவர்களிடம் (அமேரிக்காவில்) வாய்ப்பாட்டு கற்றுகொள்ள தொடங்கினார். ஆறு வயதில் சிறந்த சித்ரவீணை மேதை திரு N ரவிகிரன் அவர்களிடம் சிச்யராகி இசையில் வேகமாக வளர்ந்தார். திரு ரவிகிரன் அவர்களின் சிறந்த குருவும் தந்தையுமான சித்ரவீணை திரு N நரஸிம்ஹன் அவர்களிடமும் கற்றுகொள்ள வாய்ப்பு பெற்றார்.

ஒன்பது வயதில் மாமேதைகள் செம்மங்குடி திரு ஶ்ரீநிவாசையர் அவர்களிடமும் திருமதி D K பட்டம்மாள் அவர்களிடமும் ஆசீர்வாதம் பெற்று விஷால் சென்னை ம்யூஸிக் அக்கெடெமியில் வாய்ப்பாட்டரங்கேற்றம் செய்தார். பதிமூன்று வயதில் விஷால் சித்ரவீணை என்று ஓர் அறிதான வகை வீணையில் கச்சேரி செய்ய ஆரம்பித்தார். இது வரை சென்னையில் ஶ்ரீ க்ருஷ்ண கான ஸபை, ம்யூஸிக் அக்கெடெமி, மற்றும் பெங்களூர், ஹைதராபாத், மைசூர், உடுப்பி முதலான ஊர்களில் முக்யமான மேடைகளில் இசைத்துள்ளார். வெளிநாடுகளில் அமேரிக்காவில் க்ளீவ்லெண்ட் த்யாகராஜ ஆராதனை முதலாக பல இடத்தில், மலேஸ்யாவில் டெம்பில் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸிலும் இந்தியா ஹை கமிசனிலும், மற்றும் ஃப்ராந்ஸ் நாட்டில் ஸ்ட்ராஸ்புர்கிலும் இசைத்துள்ளார். மேலும் பல நிகழ்ச்சியில் அவர் குரு திரு ரவிகிரன் அவர்களுடன் வாசித்துள்ளார். பொதிகையிலும் மலேஸ்யாவின் ஆஸ்ட்ரோ வானவிலிலும் வாசித்துள்ளார். ஶ்ரீ ஶ்ரீ ரவி சங்கர் ஸ்வாமிகள் முன்னாலும் வாசித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளார்.

அவரின் இன்னிசை நிகழ்ச்சிகள் 'தி ஹிந்து', 'மயிலாபூர் டைம்ஸ்', 'கல்கி', முதலாக பத்ரிகைகள் பாராட்டியுள்ளன. விழுதுகளான ம்யூஸிக் அக்கெடெமியின் 'பெஸ்ட் இன்ஸ்ட்ரமெண்டலிஸ்ட் அவார்ட்' (2015), ஶ்ரீ க்ருஷ்ண கான சபையின் 'கோட்டுவாத்யம் நாராயாண ஐயங்கார் அவார்ட்', ட்ரினிட்டி ஃபைன் ஆர்ட்ஸின் 'இசைச் சைம்மல்', மற்றும் பேரா. டாக்டர் கண்ணப்பன்-வாசுகி அறக்கட்டளையிருந்து 'பண்ணிசை இளம் பரிதி' பெற்றுள்ளார்.

விஷால் பத்து வயதிலிருந்து அவர் குருவின் 'IFCM' என்ற நிறுவனத்தில் இசை பயிற்றுவிக்கிறார். மேலும் கணிணியில் ஓர் எளிதான ஸ்வரப்படுத்தும் விதி முரை அமைத்துள்ளார். விஷால் அமேரிக்காவில் டெக்ஸஸ் பல்கலைக்கழகத்தின் (UT) ஆஸ்டின் கிளையில் ஸம்ஸ்க்ருதத்திலும் பொருளாதாரத்திலும் B A பெற்றுள்ளார் மற்றும் தமிழும் வணிகமும் படித்துள்ளார். லண்டன் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸிலும் பொருளாதாரம் படித்துள்ளார்.

www.navachitravina.com · navachitravina@hotmail.com
தொலைபேசி: +91 94457 83064 / +91 44 2435 0276 (இந்தியா), +1 512 257 8586 (அமேரிக்கா)